வீம்புப்பேச்சால் விளைந்த பலன்

விலை அரை அணா | 4 பக்கம் | Regd. No. M. 5458
Phone No. 4502

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. | MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (6—9—49) வெளியீடு (7—9—49) [இதழ் 28

பாக்கிஸ்தான் போக்கு பயங்கர உருவெடுக்கிறது

மக்கள் வெறுக்கும் போரை, மன்றமேறியுள்ளோர் வரவேற்கின்றனர்!

சமரசகீதமும் சமருக்கழைக்கும் செயலும் சிறந்ததன்று

சிக்கலைத் தீர்க்கச் சொல்லிலும் செயலிலும் தூய்மை வேண்டும்

ஹிந்து மதத்தின் ஜாதிக் கோட்பாடு, சனாதனச் சனியன், இந்தத் துணைக்கண்டத்தில் பத்து கோடி மக்களை இஸ்லாமியர்களாக மாற்றிற்று. ஹிந்து மத வெறியின் அடிப்படையில் எழுந்த காங்கிரஸ் தலைவர்களின் பாசிசப்போக்கு, பிடிவாத குணம், பாகிஸ்தான் அரசாங்க உருவாகிற்று. இத் துணைக் கண்டத்தின் சுதந்திரத்திற்கு, வேறு வழி-நடவடிக்கைகளில் அல்ல-செல்ல முடியாத காரணத்தால், பாக்கிஸ்தான் கொள்கையை கடைசி நிமிஷம் வரையில் மறுத்து வந்தவர்கள், முடிந்த நிலையில் சம்மதம் அளித்தனர் அதற்கு. நிர்பந்த நிலையில் தோன்றும் மனமாற்றத்தால், பலநாள் நெஞ்சிலே ஊறி ஆழப் பதிந்துவிட்ட பண்பாடு, மாறிவிடும் என்று உளநூல் தெரிந்தோர் கூறமாட்டார்கள்.

நாவிலே கபம் இருக்கலாம். தூய்மை மணம் கமழலாம். இவைமட்டும் போதாது. அந்தப் பண்புகள், உள்ளத்திலே செயலிலே, இடம் பெறவேண்டும். இந்த உயரியநிலை, பாக்கிஸ்தான்-இந்தியா, இரு நாடுகளின் ஆளவந்தார்களிடமும் இடம் பெற்று இருக்கிறதா என்றால், துணிந்து 'ஆம்' என்று கூறுவது எவராலும் முடியாத காரியமாகும்.

இன்று, இரு அரசுகளுக்கும் மன ஒற்றுமை இல்லை. பகை உணர்ச்சி மேலோங்கிக்கொண்டு வருகிறது. தினம் தினம், விரோதம வளர்ந்து நிலைப்பதற்கும், முடிவில் விபரீத உருவு எடுப்பதற்கும், ஆன சம்பவங்களைத் தான் நாம் கேட்கிறோம். இந்த விரும்பத்தகாத, வெறுக்கத் தகுந்த, நிலைமை உண்டாக்கிவிட்டவர்கள் எவர்? இரு அரசுகளுக்கும், பின்பலமாக இருந்து வருகிற மக்களா?

அந்தோ! அவர்கள் அறியார்களே, திரைமறைவில் நடப்பது என்ன என்பதை! வேலை அதற்கான ஊதியம் - போதுமான உணவு, உடை, இருப்பிடம், வேண்டுமென்பது தானே, பெரும்பாலான மக்களுடைய வாழ்க்கை இலட்சியம். அதிகாரம்-பதவி - செல்வாக்கு-பணம் - மாடமாளிகை - இவை அனைத்தும் விரும்பி, எந்த முறையை மேற்கொண்டேனும்-அவைகளைப்பெற விழைவோர், ஆயிரத்திலொருவர் கூட கிடைக்க மாட்டார்களே! பின்னர் கூறப்பட்ட பெருந்தகைகளால்தான், எந்நாட்டிலும் கலகமும் குழப்பமும் ஏற்படவும், பிற நாடுகளோடு போர் தொடுக்கவுமான நிலை பிறக்கிறது. மக்கள் நல்வாழ்வு அல்ல இந்தக் கூளார்களின் நோக்கம். மக்கள் பெயர் கூறி, சொந்தநன்மையை வளர்த்துக்கொள்வதுதான் இவர்களின் முழுக் கருத்தும். நிற்க,

பாகிஸ்தானுக்குச் சேரவேண்டிய நிதி பிரிவினையில் ஏற்பட்ட தன் பிணக்கு, அகதிகளின் சொத்தை முடக்கும் வரையில் வந்துவிட்டது. ஜுனகாத்சமஸ்தான மக்களுக்குக் காட்டிய சலுகையை காஷ்மீர் மக்களுக்கும் காட்டி இருந்தால், காஷ்மீர் பிரச்னை இன்றுள்ள கேவல நிலைக்கு வந்திருக்காது. அதாவது, இங்கிலாந்து [illegible] ஆட்லியும், அமெரிக்கத் தலைவர் ட்ருமனும், காஷ்மீர் பிரச்னையில், இந்திய பிரதமருக்கு அறிவுரை கூறவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. அவர் கூறும் அறிவுரை, ரஷ்யாவின் ஆதிக்கத்தைத் தடுப்பது என்ற ஒரே நோக்கத்தைக் கொண்டதாகத் தான் இருக்கமுடியும். அடுத்தப் பெரும் போருக்குக் காஷ்மீர் பிரச்னைதான், முடிந்த காரணமாக இருந்துவிடுமோ என்று கூட சந்தேகிக்க இடமிருக்கிறது. பிற பேரரசுகளின் நேரடியான குறுக்கீடு இல்லாமலே பாகிஸ்தானும் இந்தியாவும், மனம் ஒன்றுபட்டு, காஷ்மீர் மக்களின் கருத்தை அறிய ஒரு சந்தர்ப்பம் அளித்து, காஷ்மீர பிரச்னையைத் தீர்த்துக்கொள்வதுதான் முறையாகும். இதுதான் நேர்மையானதும்கூட.

காஷ்மீர் மக்களின் வாக்கெடுப்பைத் தள்ளிப்போடுவதற்கு, இந்திய சர்க்கார் கூறும் காரணங்கள்கற்பனையானதாக இருந்தாலும், உண்மையானதாக இருந்தாலும், பிரச்னை நல்ல முறையில தீர்ப்பதற்கான பரிகாரம் ஆகாது. மேலும் மேலும் இரு அரசுகளிடையே, இருக்கும் பிளவை, பெருதாக்கத் தான் உதவும். காஷ்மீர் மக்களின் விருப்பப்படி நடந்துகொள்வதின் மூலம்தான் காஷ்மீர் பிரச்னையை ஒழுங்காகத் தீர்க்க முடியும். பிறர் தலையீடு பயங்கரமானச் சூழ்நிலையைத் தான், இருஅரசுகளிடையேயும் தோற்றுவிக்கும். இப்பொழுதே அதற்கான அறிகுறிகள் வெளிப்படையாகத் தெரிய ஆரம்பித்துவிட்டன.

வெற்றிக்களிப்பும், தோல்வி வேதனையும், ஆயிரக்கணக்கில்

[தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க]

வாய்ப் பேச்சு வீரர்கள் நாட்டிற்கு வேண்டாம்

வெறும் லட்சியவாதிகள் நாட்டிற்கு நன்மை செய்ய முடியாது

திரு ஜே. குமரப்பா விவசாய சீர்திருத்தக் கமிட்டித் தலைவர். கிராம வளர்ச்சியில் அக்கரைகொண்டவர் என்றும், கிராமப் பொருளாதாரத்தைப் பெருக்க நாட்டமுடையவர் என்றும் கூறப்படுபவர்.

இவர் திருச்சியில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில், "நாட்டின் தேவைகளை நன்கு உணர்ந்து அதற்குத் தக்கபடி காந்திஜீயின் பொருளாதாரத் திட்டம் தயார் [illegible]யப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மனிதனும் தனது குடும்பத்திற்குத் தேவையான பொருளைச் சம்பாதிக்க வேண்டுமென்பதே அத்திட்டத்தின் லட்சியமாகும். ஒவ்வொரு மனிதனும் தனது சுயமரியாதைக்குப் பங்கம் ஏற்படாமல் தனது குடும்பத்தைக் காப்பாற்றுவதற்குத் தேவையான பொருளைச சம்பாதிக்ககூடிய நிலையை உண்டாக்க வேண்டுமென்றுதான் காந்திஜீ பாடுபட்டார். இந்த உயர்ந்த இலட்சியங்களுக்காகவே, சர்க்கா சங்கம், ஹரிஜன சேவக் சங்கம் முதலிய சங்கங்கள் துவக்கப்பட்டன" என்று பேசியுள்ளார்.

இந்தப் பேச்சு கேட்க இனிப்பாகத்தானிருக்கிறது. ஆனால் செயல் முறையில் என்ன நடந்திருக்கிறது? தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய குடும்பத்திற்குத் தேவையான பொருளைத் தன் சுயமரியாதைக்குப் பங்கம் வராத முறையில் சம்பாதித்துக் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டுமென்ற அவாவுடையவனாகத்தான் இருக்கிறான். இதற்காகவே, கடல்கடந்து சென்று மலாயாவிலும், பிஜியிலும், இலங்கையிலும் தென் ஆப்ரிக்காவிலுமாகத் தமிழர்கள் கூலிகளாக உழைத்துழைத்து உலர்ந்துப் போகின்றனர். இது நீண்டகாலமாக நடந்துவரும் செய்தி. ரப்பர் தோட்டங்களிலும், கரும்புத்தோட்டங்களிலும் தேயிலைத் தோட்டங்களிலும் தமிழர்கள் படும் பாடு நெஞ்சுருக்கும் தன்மைவாய்ந்தவை என்பதை நம் நாடு நன்கறியும்.

ஆனால், இனிக்கும் முறையில் பேசக்கற்றுக்கொண்ட ஜே. சி. குமரப்பா வர்க்கத்தார் எல்லா மக்களும் தத்தம் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கு வேண்டிய பொருளைச் சம்பாதிப்பதற்காக என்னென்ன திட்டங்களை நடைமுறையில் கொணர்ந்துள்ளனர்? நாட்டிலே உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க எடுத்துக் கொண்ட முயற்சிகள் யாவை? ஒரு சிறு அளவிலேனும் வேலையில்லாத் திண்டாட்டத்தையோ, நாட்டின் வறுமையையோ அகற்ற இவர்களால் முடிந்ததா?

எல்லாரும் தத்தம் குடும்பத்திற்குத் தேவையான பொருளைச் சம்பாதிக்குமாறு செய்யும் இலட்சியத்துக்காகத் துவக்கப்பட்ட சர்க்கா சங்கம், ஹரிஜன சேவா சங்கங்களால் விளைந்த பயன் இம்மியளவாவது உண்டா?

சர்க்கா சங்கங்களால் நாட்டிற்கு இந்தக் காலத்தில் பயன் விளையுமென்று ஜே.சி. குமரப்பா மனமார எண்ணுகிறாரா? இத்தனை வருடங்களாக அதனால் விளைந்த பயன் என்ன வென்பதைக் கூற முடியுமா? சர்க்கா சங்கத்தால் விளைந்த ஒரே பயன், இளம்மாணவர்களுடைய படிப்பு நேரத்தைக் கெடுத்து, அவர்களுக்கு எதற்கும் பயன்பட முடியாத தக்ளி சுற்றக் கற்றுக் கொடுத்திருப்பதுதான்.

இதே போன்றது தான் ஹரிஜன சேவக் சங்கம். இச்சங்கத்தால், ஏழை ஹரிஜனங்களின் நிலைமை உயர்வதற்குப்பதில் யார் யாருடைய நிலைமையோ உயருகிறது. ஹரிஜனங்கள் தவிர மற்ற யார் யாரோ குடும்பச்சம்பாதனையைப் பெருக்க வழியறிகின்றனர்.

எனவே, சர்க்கா, ஹரிஜன் சங்கங்கள் பொதுமக்களுக்குச் சம்பாதிக்கும் திறனை ஏற்படுத்த முடியவில்லை யெனினும் இவற்றின் பெயரைக்கூறி வேறு சில சம்பாதிக்கத் தெரிந்தவர்கள் சுகமடைய வழி காட்டின என்பதை ஒப்புக் கொள்ளலாம்.

போரில் அழிந்துபட்ட ஜப்பான் எவ்வளவு விரைவில் நமக்குச் சாக்குகளை அனுப்பக்கூடிய அளவுக்கு முன்னேற்ற மடைந்து விட்டது என்பதைப் பாருங்கள் என்று நம்மவர்களுக்குப் புத்தி கூறும் தோழர் நேருவும், எல்லோரும் சம்பாதிக்க லட்சியத்தில் திட்டமிட்ட தோழர் குமரப்பாவும் ஒருமுறை ஜப்பானுக்கு நேரிற் சென்று அங்கு மக்கள் தக்ளி சுற்றவில்லை என்பதையும், அங்கு ஹரிஜன் சேவக் சங்கங்கள் இல்லை என்பதையும் பார்த்து அறிந்து கொண்டுவர வேண்டுகிறோம.

இந்த நாடும் மக்களும் முன்னேற வேண்டுமென்பதும், பாரபட்சமின்றி எல்லா மககளும் சுகமாகவாழ வழி செய்யவேண்டுமென்பதும், பணக்காரர்கள மேலும் மேலும் பணந்திரட்டுவதையும் ஏழைகள் மேலும் மேலும்

[தொடர்ச்சி 4-ம பககம பாரகக]

மத்திய சர்க்கார் போக்கைக் கண்டு மந்திரியின் வேதனை!

சிக்கனத்துக்கு இடமில்லையே என்று சிந்து பாடுகிறார்

சிக்கனக்கோடாலி வேலை செய்யத் தொடங்கிவிட்டது. மாகாண சர்க்கார்கள், 20 சதவிகிதம் நிர்வாகச் செலவைக் குறைத்துக்கொள்ள வேண்டுமென்று, மத்திய சர்க்கார், கட்டளைப் பிறப்பித்து இருக்கிறது. போலி கௌரவத்திற்காக, வெளிநாடுகளில் பணத்தைப் பாழ்பண்ணுவது போன்ற இனங்களில வரிப் பணத்தை கொளுத்தித் தீர்த்துவிட்டு, மாகாணங்களைச் சிக்கனம் செய்யுங்கள் என்று தாக்கீது செய்வது, தர்மமுமல்ல, அரசியல் முறையுமல்ல.

மாகாணங்களின் வரி இனங்களை எல்லாம் தமதாக்கிக் கொண்டு, அவசியமானச செலவுக்கே பணம் போதாமல், புது வரி ஏதாவது போடலாமா என்று வரிப்பட்டியலை எடுத்துப் பார்த்தால், எல்லா வரிகளும் மத்திய சர்க்கார் கையில் சிக்கியிருப்பதைக் கண்டு கலங்கிய கண்களுடன், திக்குமுக்காடி மாகாண நிர்வாகத்தை, நடத்திவரும இந்த லட்சணத்தில, செலவைக குறையுங்கள் என்று ஆணைப் பிறப்பதைக் கணடால, சென்னை சர்க்கார் நிதி மந்திரி கனம் கோபாலருக்கு கோபம வருவது இயல்புதானே? 'செய்யவேண்டிய சிக்கனம எல்லாம் செய்தாகிவிட்டது, இனி ஒன்றும் செய்ய முடியாது' என்று கோபாலா சோகிக்கிறார்-பிடி டில்லியிலே இருக்கிறபொழுது, டில்லியின் ஆணவப் பார்வைககு முனபு, அமைச்சரின் அலறலும், ஆத்திரமும், அடியற்ற மரம்போல் கீழே வீழ்ந்துவிடும்!

மாலை மணி

சென்னை 6—9—49 செவ்வாய்க்கிழமை

இழிநிலை என்று நீங்கும்?

மனிதனை மனிதனாகக் கருதும் மனப்பான்மையும், மனிதனை மனிதன் சமமாக நினைக்கும் மனப்போக்கும் மக்களனைவரும் பெறவேண்டும் என்றே யாரும் பகர்வர்; அதற்காகவே பாடுபடுவதாகவும் பலரும் கூறுகிறார்கள்.

மக்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் அரசியல் கட்சிகளும் சரி, சமுதாய இயக்கங்களும சரி, அந்த இலட்சியத்தை அடைவதற்காகவே அரும்பாடுபடுவதாகச் சொல்லிவருகின்றன. அதுவும் காங்கிரஸ், அந்த இலட்சியத்தைத் தேனும் சர்க்கரையுங் கலந்து குழைத்தூட்டுவதாகவே கருதித், தன்னை சாதி மதபேதமற்ற சமத்துவ நோக்கங்கொண்ட கட்சி என்று பறைசாற்றிக்கொள்ளத் தவறுவதில்லை.

காங்கிரஸ், ஆட்சி அரங்கம் அடைந்தபிறகு, தன்னுடைய ஆளுகையின் கீழ் இருக்கும் சர்க்கார் சாதிமதபேதம் பார்க்காத மதச்சார்பற்ற அரசாங்கம் என்று கூறிக்கொண்டு வருகிறது. அந்தக் கூற்றிலே நீதியும், நேர்மையும் இருக்குமேயானால், அரசாங்கம அந்தப்படி, மக்கள் எல்லோரையும் ஒரே கண் கொண்டுதான் பார்க்கவேண்டும்; மக்கள் எல்லோரையும் ஒரே விதமாகத்தான் நடத்தவேண்டும்; எல்லோருக்கும் ஒரேவித மரியாதையைத்தான் காட்டவேண்டும். அதுதானேமுறை!

ஆனால் மதச் சார்பற்ற, வேற்றுமை காட்டாத அரசாங்கம், என்று நாப்பறை அறைந்து வந்த காங்கிரஸ் சர்க்கார் இன்று மக்களுக்குக் காட்டவிருக்கும் மரியாதைக் குறிகளைப் பாருங்கள்.

ஜனப், பீகம்

மிஸ்டர், மிஸ் அல்லது மிஸஸ்

ஸ்ரீ, ஸ்ரீமதி

இவைதாம் மரியாதையின் பெயர்களுக்கு முன் கூட்டி அழைக்கப்படவேண்டிய அறிகுறிகளாம்! முஸ்லிம் ஆடவர்களை ஜனப் என்றும், பெண்களை பீகம் என்றும, ஐரோப்பியர்-ஆங்கிலோ இந்தியர் ஆகியவர் இடையே ஆடவர்களை மிஸ்டர் என்றும், பெண்களை மிஸ் அல்லது மிஸஸ் என்றும், இந்தியர் இருத்தவர்கள் உளளிட்ட மற்றெல்லோரையும் ஆடவர்களாயிருந்தால் ஸ்ரீ என்றும், பெண்களாயிருந்தால் ஸ்ரீமதி என்றும் மரியாதைக் குறிகளாகப் போட்டு அழைக்க வேண்டும் என்று சென்னை அரசாங்கம் முடிவு செய்திருக்கிறதாம்.

மக்களினத்திலே மதத்திற்கு மதம், இனத்திற்கு இனம் வேறுபிரித்துக்காட்டும் மரியாதைக் குறிகளை, மதச்சார்பற்ற ஒரு அரசாங்கம் ஏன் கைககொள்ளவேண்டும்? எப்படிக் கைக்கொள்ளமுடியும? எவ்வாறு அது பொருந்தும்? முஸ்லிம, ஐரோப்பியர், இந்துக்கள் என்றுபிரித்துக்காட்டுவானேன்? ஒரே மரியாதைக் குறியால் ஏன் எல்லோரையும் ஒரே மாதிரியாக அழைக்கக் கூடாது? மதத்தைச் சார்ந்த அல்லது வேறுவேறுபிரிவைச் சார்ந்தமரியாதைக்குறிகளுககு ஏன் வளைந்துகொடுக்கவேண்டும் ?

ஆண்-பெண் என்ற பேதமாவது இயற்கையிலேயேஇருந்து வரும பேதமாகும். ஒரே மரியாதைத்தன்மை கொண்ட ஒரே சொல்லின் அடிப்படையாகப் பிறந்த—ஆண் பால்—பெண்பால் வேற்றுமைகாட்டி நிற்கும் இரு குறிகளைக் கொள்ளுவதில் தவறு இருக்க முடியாது. அப்படிப்பட்ட சொற்கள் கிடையாதா என்றால், தாராளமாக இருக்கின்றன. ஆனால் அவைகளைக் கையாளுவதற்குப் பெருந் தன்தன்மையும், பெரு நோக்கும் வேண்டும்.

அன்பு-நட்பு-பாசம் - பற்று உறவு - உரிமை - சமத்துவம இவைகளை உள்ளடக்கிக் கொண்டிருக்கும்சொல் ஒன்று இருக்கிறது, அதுதான **தோழமை**! அந்தச் சொல்லைக் கேட்டவுடனே, பேதமனப் பான்மைகொண்ட சனாதனிகளுக்கும்அவரைச் சார்ந்தோர்க்கும் கலக்கம் ஏற்படக்கூடும். காங்கிரஸ்காரர்களிலே பெரும் பான்மையோர் அத்தகையராதலின், அவர்களுக்கு அததக கலக்கம் ஏற்படும என்பதில் ஐயமில்லை. அவர்கள் அந்தச் சொல்லை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அவர்களிடத்தில் அவ்வளவு பெருந்தன்மை எப்படி எதிர்பார்க்கமுடியும்!

மனிதன் மனிதனைச் சமமாகக் கருதுவதற்கு ஏற்ற மரியாதைச் சொல்லாக—உள்ளன்பு காட்டும் சொல்லாக—உறவு கருதும் சொல்லாக—உரிமை கொண்டாடும் சொல்லாக—ஒன்றாக இணைக்கும் சொல்லாக இருக்கும் ஒரே சொல் **தோழமை**தான்! அந்தத் தோழமைச்சொல்லைச்சொல்லி மரியாதை காட்டிக் கொண்டு வரும் நாடுதான், வலிவுள்ள—ஒற்றுமை மனப் பான்மை கொண்ட நாடாக—ரஷ்யாவாக இருந்து வருகிறது. அவ்வளவு ஆற்றல் பயக்கும் சொல்லான அந்தத் தோழமைச் சொல்லை, ஆடவர்களை அழைக்கும் போது **தோழர்** என்றும், பெண்டிரை அழைக்கும் போது **தோழியர்** என்றும் அழகுற-அன்பு ஒழுக-அழைக்கலாமே!

மரியாதைக் குறிகள் இட்டு வெவ்வேறு முறையில் அழைப்பதற்குக் காரணம், வெவ்வேறு மொழிக்காரர்களை அம்மொழிகளுக்கேற்ப அழைக்க வேண்டுமென்பதே யாகும் என்று சமாதானங் கூற முன வரக் கூடும், சென்னை அரசாங்கத்தினரும, அவரடி தாங்கி நிற்போரும். அப்படிப் பார்க்கினும், தோழமை என்ற சொல்லுக்கு ஏற்ற சமபொருள் பொதிநத அந்தந்த மொழிச் சொற்களைக் கொண்டு அந்தந்த மொழிக் காரர்களை அழைக்க ஒருப்படலாமே! அதையாவது இந்த மதச்சார்பற்ற அரசாங்கம் செய்யலாமே! செய்ய ஆற்றல் உண்டா?

உருது மொழியினைக் கொணட முஸ்லீம்களை ஜனப், பீகம் என்று அழைததால், ஆங்கிலமொழியைககொண்ட ஆஙகிலேயரையும் ஆங்கிலோ இநதியரையும் மிஸ்டர், மிஸ் அல்லது மிஸஸ் என்று அழைத்தால், சமஸ்கிருதத்தைத தாய் மொழியாகக் கொள்பவர்களை ஸ்ரீ, ஸ்ரீமதி என்றும், தமிழைததாய் மொழியாகக் கொணடவர்களைத் திரு, திருமதி என்று அழைப்பதுதானே முறையாகும். நீதிபதி ஏ. எஸ், பி, அய்யர், பிராமணர்கள் எல்லோரின் தாய் மொழி சமஸ்கிருதம் என்று சொல்லி வாதாடுகிறார். அவர் கூற்றுப்படி, இநநாட்டில், பார்ப்பனர்களை வேண்டுமானால் ஸ்ரீ, ஸ்ரீமதி எனறு அழைத்துக கொளளட்டும. ஆனால் தாய் மொழியாகத் தமிழைக் கொண்டவர்களைத் தோழர், தோழியர் எனறு அழைப்பதற்கு உள்ளத்திலே உரங் கிடையாது எனறாலும், திரு, திருமதி என்று அழைக்கலாமே ?

தமிழன் சோற்றாலடித்தப் பிண்டமாக—மொழியுணர் வற்றவனாக இருக்கும் காரணததினால் தான, ஆச்சாரியாரின் பரம்பரையினரும், அவரது தொண்டரடிப்பொடியாழ்வார்களும் தம்விருப்பப் படியே தமிழன்—திராவிடன் தலையில் வடமொழியையும், வடமொழி கலாசாரத்தையும், வடமொழி மதத்தையும் புகுத்த முயலுகிறார்கள். இந்த இழிநிலை என்று நீங்குமோ? அன்றுதான் தமிழன் தமிழனாகவும் திராவிடனாகவும் வாழ்பவனாவான். இம்மாதிரியான சிறு செயல்களிலெல்லாம், மக்கள் கண்மூடிகளாக இருந்து விடுவார்களேயானால், முடிவில்.

மொழி,கலை, நாகரிகம், பண்பாடு எல்லாவற்றையும சேர்த்து அழிக்க, வடமொழியாளர்கள் ஒரு போதும் தயங்கமாட்டார்கள். அதற்காகவே நீதிபதி அய்யரிலிருந்து, தெருக்கோடித் திண்ணை அய்யர் வரையில் திட்டமிட்டு வேலை செய்து வருகிறார்கள். அந்த முயற்சியிலே ஒன்றுதான் ஸ்ரீ, ஸ்ரீமதி வற்புறுத்தப் படுவதாகும். சிறுதுளிகள் தானே பெருவெள்ளமாகிறது!

உண்மையும்-உபதேசமும்

முரண்படும் விசித்திரம் ஏன் ?

'விஞ்ஞான சாஸ்திர முற்போக்கின் பலனாக, இன்று உலகம் ஒரு முழுப்பொருளாக விளங்குகிறது' என்று தோழர் சங்கர் ராவ் தேவ் ஒரு கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

உலகத்திலே சில நாடுகள் சிறந்திருப்பதும், சில நாடுகள் தாழ்ந்திருப்பதும் விஞ்ஞானத்தைப் பொறுத்திருக்கிறது என்ற நிலை இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. எந்த நாடு விஞ்ஞான வளர்ச்சிக்கு அதிக இடம் கொடுத்து அதனைப்பயன் படுத்திக்கொண்டுள்ளதோ அந்த நாடு, எல்லா வகையிலும் சிறந்தும், எந்தநாடு விஞ்ஞான வளர்ச்சியில் அதிக அக்கறை செலுத்தவில்லையோ, அந்தநாடு பலவகைகளில் தாழ்ந்தும் காணப்படுகின்றன. இந்த உண்மை திட்டவட்டமாகத் தெரிகிற காரணத்தால்தான், விஞ்ஞானத்தின் முற்போக்கைக் கண்டு வியக்கும் அளவுக்குத் தோழர், தேவ் உணர்கிறார்.

உணரும் இந்த உண்மையை உபதேசிக்க முறபடுகிறாரா என்றால் இல்லை! தக்ளியையும், கைராட்டையையும் சுற்றி, குடிசைத் தொழில்களையே செய்யச சொல்கிறார். காந்தியார் உபதேசித்தார்-ஆகவே கதர் மீது ஒரு வித மூட நம்பிக்கை-குருட்டுப் பக்தி. அதனால் பலன் உண்டா? அதைப் பற்றி யாராயாமல், தக்ளியைச் சுற்றச சொல்லி நூற்புயக்ஞயம் வைத்து விளையாட்டுக்காட்டுகிறார்கள்.

தோழர், சங்கர் ராவ் தேவிலிருந்து எல்லா காஙகிரஸ்காரர்களும உண்மை என்று உணர்வது விஞ்ஞானம்; ஆனால் உபதேசிப்பது கதர் நூற்பு! இரண்டும் ஒன்றுக்கொன்று பொருந்துகிறதா? ஏன் உண்மையுணர்வும், உபதேசமும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு விளஙக வேண்டும்! அதுதான் காங்கிரஸ்காரர்களிடத்திலே அடிக்கடிக் காணப்படும் விசித்திரமாக இருந்து வருகிறது!

'ஹாம்லட்'டுக்கு முதல்பரிசு

சில கிழமைகளுக்கு முன்பு சென்னையில் காட்டப்பட்ட, ஹாம்லட் என்ற பிரிட்டிஷ் பேசுமபடத்துக்கு, சிவிடசர்லாந்திலே ஒரு சினிமா இதழ நடத்திய, ஓட்டெடுப்பில், அதிகப்படியான ஓட்டுகள கிடைத்தது. இந்த வருஷதது முதல்தரமான படம் என்று, 'ஹாமலட்டு'க்குத் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. முதல்பரிசு பெற்ற இப்படததில் 'ஹாமலட்'டாக நடித்த லாரன்ஸ் ஆலிவர் எனும் நடிகர், முதல தர நடிகர் என்று ஆதரவு பெற்றிருக்கிறார்.

'சிகப்புச்செருப்பு' என்ற மற்றோர் பிரிட்டிஷ் படம் இரணடாம்தரமாகவும், ஆலிவர் டிவிஸ்ட் என்ற படம, ஆறும்தரம, என்று, குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சொல் அலங்காரச் சூரர்

செயலில் பழைய கறுப்பனே!

"இந்து கலாசாரம், இந்து தேசம என்ற பேசசுகள் எலலாம வெறும் அபத்தமாகும். நாம் சுதந்தரத்துடன் உயிர்வாழவேண்டுமானால் இந்தக் குறுகிய மனப்பான்மை தனிதது நிறகும்போக்கு முதலியவை ஒழிய வேண்டும்."

*

"இந்தியா மதச்சார்பற்ற ஜனநாயக நாடு என நாம் பிரகடனம செய்துள்ளோம். எனவே நம் மதசசார்பற்ற தன்மையை நாம் தொடாந்து பராமரிக்கவேண்டும். பிற சுதந்தர நாடுகளிலிருப்பதுபோன்று இந்தியாவிலுள்ள ஒவ்வொரு பிரஜைக்கும் பரிபூரணச சுதந்தரம் இருத்தல் வேணடும.........சதா மாறிக்கொண்டேயிருக்கும நமது சூழ்நிலைகளுக்கேறப நமது நோககஙகளையும் லட்சியஙகளையும மாற்றிக்கொள்ள வேண்டும்."

*

இந்தச் சொல் அலங்காரங்கள், பண்டித நேருவால் அலிகார் சர்வகலாசாலைக் கழக மாணவர்கள் சட்டத்தில வெளியிடப்பட்டன. கருதது அருமையாகவும அலஙகாரமாகவும அளிக்கின்றன.

ஆனால், செயலளவில் ஒன்றேனும பின்பற்றப் படுகிறதா என்பதைப் பாருஙகள!

இந்தியாவிலுள்ள எல்லா மக்களும் பொதுவாகப் பயன் படுத்த வேண்டியிருக்கும் தபால் தலைகளில் இந்துமத-இந்து கலாசாரச சின்னஙகளைப் பொறித்து வைத்திருப்பதேன் ? இது மதசசார்பற்ற தன்மையை விளக்குகிறதா ?

இந்தியாவிலுள்ள ஒவ்வொரு பிரஜைக்கும் கருத்துச சுதந்தரம இருக்கிறதா? உணமையான வரலாற்றுச சம்பவஙகளையும், இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கும் பிளவு பட்ட நிலைக்குரிய உண்மையான காரணஙகளையும் தக்க ஆதாரங்களோடு எடுத்துக்காட்டும் நூல்களைச் சென்னை அரசாஙகம் பறிமுதல் செய்யவும் தடை விதிக்கவும், ஜாமீன் கேட்கவுமான செயல்களில் ஈடுபட்டிருப்பதற்குக் காரணம் என்ன ?

மாணவர்கள் மெச்ச, பேச்சைப் படிக்கும் உலகத்தார் பாராட்ட, வாய்க்கு வந்தவாறு பேசிவிடுவது போதும்! ஆனால் செயலாற்றுகையில் பழைய கருப்பனே கருப்பன் எனச் சனாதனியாகக் காட்சியளிப்பது தான் இந்திய ஆட்சிப் பீடத்தலைமையிடம் போக்கும் போலும்.

அரசாங்க அடக்குமுறையின் அடுத்த பாய்ச்சல்

அண்ணாத்துரை—ஆசைத்தம்பி இரையாகின்றனர் !

"இலட்சிய வரலாறு [illegible] "காந்தியார் சாந்தி அடைய ?" என்ற நூல[illegible] முறையே ஆசிரியர்களான தோழர்கள் சி. என். அண்ணாத்துரை, ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகிய இருவர்மீதும சட்டப்படி நடவடிக்கை எடுக்க சென்னை அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருப்பதாகத் தெரியவருகிறது. நூலாசிரியர்கள் மீதே நடவடிக்கை எடுத்துக்கொளளும அடக்குமுறையின அடுத்த பாய்ச்சலில் அரசாங்கம் இறங்கி இருக்கிறது. அது இன்னும் என்ன என்னவெல்லாம் செய்யுமோ?

வாழ வகை இல்லை! வட்டிக்குப் பணம் வாங்கினான்!

கடன் கொடுக்க முடியவில்லை! தூக்கிட்டுத் தொங்கினான்!

உயிர் வாழ ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. உயிர் வாழ நினைப்பது எவருக்கும் இயற்கை. அவனுக்கும் அந்த எண்ணம் இருந்ததிலும் வாழ்க்கைப் போர்களத்தில் ஒரு போர் வீரனாக இருந்து போராடினதிலும் குற்றமில்லை, ஆச்சரியமும் இல்லை.

உயிர்வாழ வேண்டியதற்காக உழைத்தான். உடம்பினைத்தான். உருக்குலைந்தான். இவ்வளவுதானா? உள்ளமும் உடைந்தான். உழைப்பின் ஊதியம், தனது உயிரையும் உடலையும் ஒன்றாக ஒட்டவைத்திருக்கப்போதியதாக இல்லாமல் இருந்ததால், அதனை நினைந்து நினைந்து நொந்தவாழ்வு வாழ்ந்து வந்தான்.

உற்றார்உறவினர்உதவி கிடைக்கவில்லை. தேவையான நேரத்தில், நாலு காசு கடனாகக் கொடுத்து நற்றுணை செய்ய ஏழைக்கு எங்கே பணம் படைத்த நண்பர்கள் கிடைப்பர்? சந்தலுக்கு ஏற்ற தொந்தல்கள்தானே நண்பர்களாக இருக்க முடியும்?

உயிர்வாழ்வதிலே இருந்தஆசை, நெஞ்சுவேகும் நெருக்கடியான தன்மை, நமபிக்கையூட்டும் விதத்தில் உதவி கிடைக்கக்கூடாத திக்கற்றநிலை, இவ்வளவும் அவனை கடன்படவைத்தது. கடன் என்ன கைமாத்தா? ரூபாயுக்கு இரண்டணா மூன்றணா எட்டணா என்ற முறையில் வட்டி! அதிலும், கடன் வாங்கும் பொழுதே, ஒருமாதவட்டியை பிடித்துக்கொண்டு, மிச்சத்தைக் கொடுக்கும், கருணை மிகுந்த காரியம்!

என்னமோ கடன் பட்டுவிட்டான், அந்த நேரத்தில், வாழ்க்கைச் சுமையின் பாரத்தைத் தாங்க முடியாததால், கொஞ்சம் நிம்மதி பெற்றான். இல்லை-நிம்மதி நிழலிலே சிலநாள் உயிரோடு இருந்து வந்தான்.

பட்ட கடனைத் திருப்பிக் கொடுக்கவேண்டிய நாள் வந்தது. சாக்குப்போக்குச் சொல்லி தவணை நாளைத்தள்ளிப் போட்டான். வாழ்க்கைக் கவலையும், கடன்பட்ட கவலையும், கடன் கொடுத்தவனின் கூர்மையான சொல்லம்புகளும், பயங்கரம் நிறைந்த எதிர்காலமும் ஒன்றுசேர்ந்து, அவன் இருதயத்தை சல்லடைக் கண்களாகத் துளைத்துவிட்டன.

உயிரோடு இருப்பது, கடனைத் திருப்பிக் கொடுப்பது, கடன்காரர் கெடுபிடியைத் தாங்கிக் கொள்வது, எதிர்காலத்தில் வாழ வழிசெய்து கொள்வது, எல்லாவற்றிற்கும் மேலாக தன்மானத்தைக் காப்பாற்றிக் கொள்வது; என்பது போன்ற பிரச்னைகளுக்கு, முடிவு காணும் பணியை, அவன் மூளை மேற்கொண்டு மேற்கொண்டு முயன்று, முயன்று முடிவு ஒன்றும் காண முடியாததால், ஒரே குழப்பநிலை அடைந்துவிட்டது. தெளிவாக சிந்தித்துப்பார்க்கும் பண்பு தொலைந்தது. குழப்பம், குழப்பம், எதிலும்-எங்கும் குழப்பம்!

முடங்கல் ஒன்று தீட்டினான். தன்னால் முடிவு காண முடியாத பிரச்னைகளை எழுதிருவாக்கினான்; கூரிரில் உயரத்தில் இருந்த உத்தரத்திற்கும், தனது மணிக்கழுத்திற்கும், பலம் பொருந்திய சிறு கயிறு ஒன்றினால், தொடர்பு ஏற்படுத்திக்கொண்டான். கயிறு அவனை ஏமாற்றிவிடவில்லை. இந்தச் சமுதாயத்தைப்போல்! ஏழைக்கு எப்பாம் உதவி செய்வ என்ற எண்ணிக்கொண்டு, முன்பின் தெரிந்தவர்கள் உதவிக்கு வாராதது போல், உயரத்தில் இருந்த உத்தரம், அவன் வாழ்க்கைச் சுமையை வாங்கிக்கொள்ள மறுத்துவிடவில்லை. தூலமும் கயிறும், அந்த வறியவனுக்கு உதவின. தொல்லைகள் பலவற்றில்இருந்தும் அவனுக்கு விமோசனத்தைத் தேடிக்கொடுத்தன.

கடன்காரர் கெடுபிடிகளில் இருந்து தப்பின். வாழ்க்கையின் தாக்குதலும், இனி அவனைத் தீண்ட முடியாது. மானமிழந்ததும், இனி அவனுக்கு இல்லை. உடலை விட்டு உயிர் பிரிந்துவிட்டது. மாண்டான். வாழ்க்கைப் போர்க்களத்திலிருந்து வாபஸ் ஆகிவிட்டான்!

அவன் வேலை தேடியலைந்தகாலை, வேலை கிடைத்தும் வருவாய் போதியதாக இல்லாமல் வேதனைபட்டகாலை, அதிலிருந்து மீள வழி தேடினகாலை, வழி கிடைக்காமல் விழித்தகாலை, கடன்காரர் கெடுபிடி செய்தகாலை, கடன் கொடுக்க முடியாமல் கலங்கியகாலை, காருண்ய மிக்க சர்க்காரோ, சதிகார சமுதாயமோ, அவனுக்கு உதவிசெய்ய முன்வரவில்லை. அப்படி ஒருவன் இருக்கிறான் என்று கூட நினைத்துப்பார்த்ததில்லை தூக்கில் மாட்டிக்கொண்டு அவன் தூக்கில் தொங்கி விட்டபிறகு, பரிதாபப் படுகிறது சமுதாயம். சங்கடப்படுகிறது சர்க்கார். போலீஸ் மரணவிசாரணை நடத்துகிறது. 'மூளைத்தொந்தரவால் தற்கொலை செய்துகொண்டான்' என்று தீர்ப்பளிக்கிறது.

கோவிந்தசாமியின் பிணம் உயிர் பெற்று, தனது பிணத்தைச் சூழ்ந்திருந்த பெரிய மனிதர்களையும், போலீஸ் முக்கியஸ்தர்களையும் காண, நேர்ந்திருந்தால், என்ன செய்திருக்கும் தெரியுமா? உரக்கச் சிரித்திருக்கும்-நீண்ட பெருமூச்சு ஒன்று விட்டுவிட்டு, மறுபடியும் பிணமாகி இருக்கும்.

ஒன்றுதான், தனிப்பருக்கு வாழ உத்தரவாத அம்ளிக்கும் சமுதாயமும், மக்கள் சர்க்காரும், இந்த நாட்டில் ஏற்படுமோ?

சென்னை வண்ணையம்பதி, பெயர் கோவிந்தசாமி, வயது நாற்பது, வாங்கின கடனைத் திரும்பக்கொடுக்க முடியாததால், தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

1—9—49 மெயில்.

மத்திய அரசாங்கம் நம் மாகாணத்துக்குச் செய்யும் நன்மை!

எதற்கெடுத்தாலும் மத்திய அரசாங்கத்துடன் தொடர்பு [illegible] வேண்டும் என்றும் எல்லா வகையிலும் மத்திய அரசாங்கத்துடன் ஒரே ஏகபோக நாடாக இருந்தால் தான் நல்லது என்றும் காங்கிரஸ் தோழர்கள் கூறுகின்றார்கள்.

இது எலியும் தவளையும் நட்புக் கொண்டு, வல்லூறுக்கு விருந்தாகும் நிலையைத்தான் கொண்டுவரும் என்று நாம பன்முறையும் எடுத்துக் காட்டி வந்துள்ளோம.

இன்று மத்திய அரசாங்கத்தின் செலவினம அளவு கடந்து பெருகி 49 லட்சம் ரூபாய் மிச்சத்தை எதிர்பார்த்த வரவு செலவுக் கணக்கிலே 45 கோடி ரூபாய் துண்டு விழுந்துவிட்டது. இதைச் சரிகட்ட மத்திய அரசாங்கம் மற்ற மாகாணங்களைப் பலி கொடுப்பதை தவிர வேறு வழி அதற்கில்லை. எனவே மத்திய அரசாங்கத்தின் பண உதவி நாடும் புதிய திட்டங்களின் செலவை 20 சதவிகிதமாவது மாகாணங்கள் குறைத்துக் கொள்ள வேண்டுமென்றும், வீடு கட்டும் திட்டங்களில் மிகவும் சிக்கனமாக இருக்க வேண்டுமென்றும் பொதுவாக எல்லா மாகாணங்களுக்கும் மத்திய அரசாங்கம உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

சிறப்பாகத் தென்னிந்தியாவில் ஸ்டேஷன்களில் மின்சாரவிளக்குப் போடுதல், புதுப்பித்தல், சிறிய ஸ்டேஷன்களை ஒழுங்காக அமைத்தல், புதிய பாலங்கள் அமைத்தல் போன்ற உருப்படியான வேலைத் திட்டங்களை யெல்லாம் நிறுத்தி வைக்குமாறு மத்திய அரசாங்கம் தென்னிந்திய ரயில்வேக்கு கட்டளை பிறப்பித்திருக்கிறதென்று தெரிகிறது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், ஏழை மக்களுக்கு வீடுகட்டிக் கொடுக்கும் வேலைகைப் பெருவாரியாகச் செய்ய வேண்டியது இன்றியமையாததாயிருக்கின்றது. [illegible] வீடற்ற ஏழைகள் நம் நாட்டில் இருப்பதைப்போன்று, நம் நகரங்களில் தெரு ஓரங்களிலும், திறந்த வெளிகளிலும ஒண்டிக்கிடந்து வாழுவதைப் போன்றும் வெளி மாகாணங்களில் இல்லை.

அதேபோன்று, நம் மாகாணத்தில் ரயில்பாதையை இன்னும் விரிவுபடுத்தி, கிராமங்களைப்போக்குவரத்து வசதி உடையவைகளாகச் செய்ய வேண்டுவது மிக முக்கியமான வேலையாக இருக்கிறது.

தவிர, தென்னிந்திய ரயில்வேயில் உள்ள ஸ்டேஷன்களும், ரயில் பெட்டிகளும் அநாகரிக நிலையில் தான் வைக்கப்பட்டிருக்கின்றனவே தவிர மக்கள் பிரயாணம் செய்வதற்கு வசதியானவை என்று சிறிதும் கூறக்கூடிய நிலையிலில்லை. இவற்றை யெல்லாம் உடனடியாகச் சீர்திருத்தி அமைக்க வேண்டியது இன்றியமையாத வேலையாக இருக்கிறது.

ஆனால், இத்தகைய முக்கியமான வேலைகளுக்குத்தான் பணமில்லை என்ற பாட்டுப் பாடப்படுகிறது. நாம் இச்சீர்திருத்தங்களைச் செய்யக் கூடாதென்று தடைவிதிக்கப்படுகிறது. அதே சமயத்தில் இந்தியாவின் மற்றைய ரயில்வேக்களைவிடத் தென்னிந்திய ரயில்வே மூலமாகத் தான் அரசாங்கத்தாருக்கு ஏராளமான வருவாய் கிடைக்கிறது. வருவாயை இன்னும் கூடப் பெருக்கிக் கொள்ள முனைவதில் சளைக்காத மத்திய அரசாங்கம், நலன்களைச் செய்துதர பின்னடைவதும் மறுப்பதும் நிறுத்திவைக்குமாறு கூறுவதும் எத்தவகையில் நியாயம் என்பது எமக்குப் புலனாகவில்லை. இந்த அழகிலே அமெரிக்காவில் இவ் வயிவிர்த்திக்கெனக் கடன்வேறு வாங்கப்பட்டிருக்கிறது.

டி. கே. எஸ். சகோதரர்களின் நாடகம்

உணர்ச்சி யூட்டும் ஒப்பற்ற சரித்திர சித்திரம்......

7-9-49 புதன்கிழமை முதல் தினசரி

"தினமணி" ஆசிரியர் திரு. ஏ. என். சிவராமன் அவர்கள் தலைமையில்

"சிவாஜி" (டாக்டர் T.S. துரைசாமி அவர்கள் எழுதியது)

சுதந்திர வீரன் 'சிவாஜி'யின் வீரச் செயல்கள் மட்டுமே மக்களிடம் பிரபலமடைந்துள்ளன. இந் நாடகம் 'வீர சிவாஜி'யின் நீதியையும் நேர்மையையும் எடுத்துக்காட்டும் ஒரு அருமையான நாடகம். சரித்திரப் பின்னணியில் தூய்மையான காதல் சித்திரமும் நூலிழைபோல் பின்னப்பட்டுள்ள கருத்தோவியம் இந்நாடகம்.

சென்னை ஒற்றைவாடையில்

எதிர்பாருங்கள் :—

"உயிரோவியம்", "இமயத்தில் நாம்"

ஆசிரியருக்கு முடங்கல்

குருசாமியார் கூறுவாரா?

இன்று காலை சென்னை கோமளீஸ்வரன் பேட்டை வீரபத்திர ஆச்சாரி தெருவில் நடந்த சீர்திருத்த திருமணத்தின் போது விடுதலை ஆசிரியர் குருசாமி சில உரைகளைக் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளார். அவை:—

"பெரியார் திருமணத்தால் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டிருப்பது, அவர் திருமணத்தை நான் ஆதரிப்பதைப் பற்றியும் கூடிய சீக்கிரம், மாநாடுகளிலோ அல்லது கழகப்பொதுக்கூட்டங்களிலோ இருதரப்பினருக்குமுள்ள பல இரகசிய திடுக்கிடக்கூடிய பொது மக்கள் ஆச்சரியப்படக்கூடிய செய்திகளை நானே வெளியிடப் போகிறேன். அப்பொழுது பொது மக்கள் பெரியார் திருமணத்தின் உண்மைகளை உணர்வார்கள்" எனத் தோழர் குருசாமி பேசியுள்ளார். பெரியார் திருமணத்தை ஆரம்பத்திலிருந்து எதிர்த்தும், அண்ணா அவர்களுக்கு ஆள் அனுப்பி அவ்வரை அழைத்துக்கலந்து பேசிய பிறகு, பெரியார் திருமண முயற்சியைக் கைவிட வேண்டுமாறு பெரியாரிடம் கேட்டிருக்கும் குருசாமியார், திடீரென்று "விடுதலை"யில் ஆதரவு தலையங்கங்கள் தீட்டி வருவதைக்கண்டுபொதுமக்கள், குழப்பமான நிலையில் பிளவுபட்டு, கட்சியின் பணியில் ஒதுங்கி நின்று கட்சி பணியாற்ற முடியாமல் ஸ்தம்பித்திருக்கும் இந்நிலையில் மேற்படி தோழர் குருசாமியார் கூறியுள்ள 'திடுக்கிடக்கூடிய' செய்திகளை விரைவில் பொதுமக்கள் உணரும்படியும் உண்மையை (விடுதலை வாயிலாக) உடனே உரைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன் செய்வாரா?

குறிப்பு:—இதனுடைய நகல்! 'விடுதலை'க்கு அனுப்பப்பட்டுள்ளது.

எஸ். துரைராஜன், 4—9—49.

கோமளீஸ்பரன் பேட்டை, சென்னை.

* * *

அரசாங்கம் முன்வருமா?

சென்னை மாகாணத்தின் தேவையில் மூன்றிலொருபங்கே உப்பு உற்பத்தி செய்யப் படுவதாகவும், தேவைக்கு வேண்டிய உற்பத்தி செய்வதற்கு சர்க்கார் வசதி அளிக்க வேண்டுமென்றும், உப்பு உற்பத்தி தொழிற்சாலை சட்டத்தை அனுசரிக்கக் கூடாது என்றும் 27-8-49ல் சென்னையில் நடந்த உப்பு உற்பத்தியாளர் மாநாட்டில் தலைமை தாங்கிய தோழர் எ. வேதரத்னம் அவர்கள் கூறியுள்ளார்கள். இதை ஆதரித்தே அந்த மாநாட்டின் திறப்பாளராக இருந்த உணவு மந்திரி கனம் ஜே.எல்.பி. ரோச்விக்டோரியா அவர்களும் கூறியிருக்கிறார்கள். இது 28-8-49—ல் சென்னை பத்திரிக்கை யொன்றில் வெளியாகியுள்ளது.

தொழிற்சாலை சட்டத்தை அனுஷ்டிப்பதால் உப்பு உற்பத்தி குறைவு படுகிறது என்று கூறுவது பணம் திரட்டவேண்டும் என்ற ஒரே நோக்கமும், தொழிலாளர்களைத் துன்புறுத்தித் தற்பொழுது பார்த்து வருகிற 8 மணி நேர வேலையை அதிக மணி நேர வேலையாக்கி அந்த எட்டுமணிநேரக் கூலியை மட்டும் கொடுத்து வேலையை அதிகப்படுத்திக்கூலியை குறைத்து பணம் திரட்டவேண்டும், என்ற நோக்கமே தவிர வேறு காரணங்கள் அல்ல. இந்த தொழிற்சாலை சட்டத்தால் உப்பு உற்பத்திக் குறைவுபடவில்லை.

இப்பொழுது பார்த்து வரும் தொழிற்சாலை சட்டத்தின்படியே உழைப்புக்கேற்ற ஊதியம் தந்து போக்குவரத்து வசதிகள் கொடுத்தால், தூத்துக்குடியில் மட்டும்உப்பு உற்பத்தி செய்து இந்த மாகாணம் மட்டுமல்ல வெளி நாடுகளுக்கும் உப்பு விநியோகம் செய்யத்தயாராக இருக்கிறோம். அது மட்டுமல்ல, உப்பு உற்பத்தி செய்கிற இடத்தையே தொழிலாளர்களிடம் ஒப்படைக்கட்டும். உப்பு உற்பத்தியை பெருக்குவது மட்டுமல்ல, இப்பொழுது மக்களுக்குக் கொடுக்கும் விலையை மலிவாகக் கிடைக்கும் அளவுக்கு எம்மால் உற்பத்தி செய்ய முடியும். இவ்விதம் செய்ய அரசாங்கம் முன் வருமா?

தோழர் A. வேதரத்னம். அவர்கள் கூறியது, தொழிலாளர்களை மட்டும் சுரண்டும் காரியமல்ல. அரசாங்கத்தையும் ஏமாற்றுவதாகும். எப்படி யெனில் மூடை ஒன்றுக்கு சட்டப்படி இரண்டு மணங்கு உப்பு தான் நிரப்பவேண்டும். இதைப் பார்வையிட அதிகாரிகள் உண்டு. அந்த இரண்டு மணங்குக்கும் அரசாங்கத்திற்கு 4 அணா தீர்வை செலுத்த வேண்டும். சர்தார் வேதரத்னம் அவர்கள் கூறியது போல் சட்டம் ரத்தாகி விட்டால நினைத்த நேரத்தில் பாத்தியிலிருந்து உப்பை வாரி, 2 மணங்குகளுக்கு பதிலாக $2\frac{1}{2}$ மணங்கு உப்பை மூடைகளில் நிரப்பி, 2 மணங்குகளுக்கு மட்டும் தீர்வையை செலுத்திவிட்டு, வியாபாரிகளுடன் கள்ளத் தொடர்பு வைத்து விற்க ஆரம்பித்து விடுவார்கள். இதில் லட்சக்கணக்கான ரூபாய் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட ஏது வாகும்.

இவ்விதம் மூட்டைக்கு $\frac{1}{2}$ மணங்கை அதிகப்படுத்தி நிரப்பினால் தொழிலாளர்களையும அதிகம் பாதிக்கிறது. எனெனில் வண்டிகளில் ஏற்ற மூட்டை ஒன்றுக்கு இரண்டு மணங்கு வீதம் நூறு மூட்டைகளுக்கு $6\frac{1}{4}$ ரூபாய் வாடகை. $2\frac{1}{2}$ மணங்கு ஒரு மூடையான வுடன் 100 மூடைகளில் 50 மணங்கு அதிகமாகி 25 மூட்டைகளுக்குண்டான கூலி 1-9-0 குறைவு ஏற்பட்டு விடுகிறது. இவ்வித காரணங்களுக்குத்தான் சட்டம் ரத்தாக வேண்டும் என உப்பு முதலாளி தோழர் A. வேதரத்னம் அவர்கள் உப்பு உற்பத்தியாளர் மகாநாட்டில் வயோசனை கூறியுள்ளார்கள். ஆனால் கனம் மந்திரி அவர்களும் ஆதரித்துள்ளார்கள். எனவே அரசாங்கம இதில் கண்காணிப்பாக இருக்க வேண்டும் எனக் கூறுகிறேன்.

கே. வி. கே. சாமி, தலைவர், உப்புத் தொழிலாளர் சங்கம், தூத்துக்குடி. 2—9—49.

வீம்புப் பேச்சால் விளைந்த...

—[1-ம் பக்கம் தொடர்ச்சி]—

உயிரிழந்தவர்கள் போக, இலட்சக்கணக்கான அகதிகளை, இரு நாடுகளிலும் உண்டாக்கி விட்டன. அவர்கள் இருப்பை நிரந்தரமாக்க, இன்னும் இரு அரசுகளாலும் முடியவில்லை. மேலும் பல ஆண்டு செல்லும், அவர்கள் துன்பத்தைத் துடைக்க. இதற்குள் மற்றொரு, புது நடவடிக்கையில் இறங்கி இருக்கிறது பாகிஸ்தான், இருக்கும் பகையை வளர்க்க.

இந்திய யூனியனில் இருந்து பாகிஸ்தான நிலப்பரப்பில் பாயும் ரவி, சட்லெஜ், பியாஸ் முதலிய நதிகளின் ஓட்ட அமைப்பையே மாற்றிவிட, இந்திய சர்க்கார் முயற்சிப்பதாகப் பாகிஸ்தான் குற்றம்சாட்டுகிறது. எனவே, இந்தப்பிரச்னையும் ஐக்யநாடு சபையின் கதவைத் தட்டக் காத்துக்கொண்டிருக்கிறது.

5-9-49ந் தேதியை "இந்தியத் துணி பகிஷ்கார நாளா"கக் கொண்டாட வேண்டுமென்று கராய்ச்சி துணி இறக்குமதி செய்வோரும், மொத்த வியாபாரிகளும் தீர்மானித்துவிட்டு இருக்கிறார்கள். இந்தியத்துணிகளை இறக்குமதி செய்யக்கூடாதென்றே, கட்டக் கூடாதென்றே, பிரசாரம் செய்யும் துவக்க நிலையையும் தாண்டிவிட்டிருக்கிறது, இந்தப் பகிஷ்காரக் கூச்சல். குறிப்பிட்டத் தேதியில் இந்தியத் துணிகள் [illegible]க்கிரையாக்கப்படும் என்று [illegible]றிவிக்கப்பட்டிருக்கிறது. பாக[illegible]ஸ்தான் பணமூட்டைகளின் [illegible]னுபாவம், பாகிஸ்தான் மக்[illegible]; இந்த இடத்தில் கொண்டு [illegible]து, நிறுத்தி இருக்கிறது. இத[illegible]க் கேள்வியுறும், இந்திய யூனி[illegible] மக்களின் மனம், எந்த [illegible]கயில் உருவாகும்? [illegible]த்தமில்லாம் பாகிஸ்தான் [illegible]கள் மீது ஆத்திரம்தானே [illegible]பட இடமேற்படும்? பாக[illegible]ஸ்தான் பணமூட்டைகளின் அக்கிரமச் செயலால், அந்த நாட்டு மக்கள் அவதிப்படத்தான் வேண்டுமா?

இனி இந்த நாட்டுத் தொழில் அரசுகளும், தங்கள் வருவாய் பாதிக்கப்படுவதின் காரணமாக, பாகிஸ்தானுக்கு எதிராக, இங்குள்ள ஆட்சியாளர்களுக்கு நாபமிடும் கறபணியை மேற்கொள்ளப் போகிறார்கள். எனவே, பாகிஸ்தான் செய்யும் சிறு தவறையும், கடுகைக் குன்றாக்கியும் குன்றைக் கடுகாக்கியும் பேசுவதையே பிறவித் தொழிலாகக்கொண்ட தேசியப் பத்திரிகைகளும், 'விடாதே, கோட்டத்தை அடக்கவேண்டும்' என்பதுபோன்ற தலைப்புகள் கொடுத்து, மக்களுக்குக் கோபத்தை மூட்டுவார்கள் இந்த நிலையில் மக்கள் கொதிக்கிறார்கள் என்று காரணம் கூறி போர் முரசு கொட்ட வேண்டியதுதான் பாக்கி. தேசிய பத்திரிகைகள் என்பவைகளோ தொண்ணூற்றி ஒன்பது சதவிகிதம் ஆலை அரசுகளுடையன. வெறும் வாயை மெல்லும் பழக்கமுடையவர்கள், ஒருபிடி அவல் கிடைத்தால் சும்மாவா இருந்து விடுவார்கள்? மற்ற நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் துணிகளைக் காட்டிலும், இந்தியத் துணிகள் விலையில் அதிகக் கூடுதலாக இருக்கிறது என்னும் மூலகாரணத்தால்தான், இந்த பகிஷ்கார நாடகம் நடக்[illegible] என்று. பாகிஸ்தான் பகிஷ்கார நடிகர்கள் கூறினால், முழுதும் பொய் என்று அதனை விலக்கி விடமுடியாது. பாகிஸ்தான் மக்களின் நாட்டுப்பற்றுக்குதல், இந்தியத் துணிபகிஷ்காரம் ஒரு உரைகல், என்று கூறி பாகிஸ்தான் மக்களின் ஆவேசத்தைக் கிளப்பிவிடுவர் அங்குள்ள பண மூட்டைகள். அவர்கள் ஏவல் படிபாடும் எழுத்துப்படைகள், அவர்கள் காட்டிய வழியைப் பின்பற்றி, பாகிஸ்தான் அரசுக்கு முறுக்கேற்றும் பணியை மேற்கொள்ளும். முடிவு போராக விளையும். இரு அரசுகள் ஏற்படாது இருந்த நிலையில், இரு கட்சிகளுக்கும் பிணக்கு ஏற்பட்டால் அது வெறும் வாய் வம்பளப்பேடு நின்று விடும். இன்றைய நிலை அது அல்ல. படை வசதி, பண வசதி, அவைகளைப் பயன்படுத்தும் பதவி வசதி பெற்றுள்ளார்கள் இருகட்சியினரும், இரு அரசுகளிலும். ஆரம்ப முதல் அந்தம் வரை முரண்பட்ட கோட்பாடுகளைக் கொண்டிருந்தவர்கள், அரசாளும் உரிமை பெற்ற பின்னர், முன்னுள் பகை நீங்கி, நட்பேற்படுத்தி, உறவை பலப்படுத்திக் கொள்வார்கள் என்று நம்புவதற்கில்லை. இந்த மூலக்கோளாறின் விளைவுதான், இரு நாட்டிலும் மக்கள் படும் அவதி அனைத்தும். பரிகாரம் தேடவேண்டும் இதற்கு. மக்கள் சக்தியால் தான் முடியும் இதற்கான சூழ்நிலையை இரு நாட்டிலும் ஏற்படுத்த. மக்கள மனம் விரிந்தால் தான் ஆளவந்தார்கள் மிடுக்கும் குறையும். அதற்கான நடவடிக்கையை, நேர்மையான முறையில், மேற்கொள்வதுதான், இன்று மக்கள் முன்னுள்ள பெரும்பணி. இரு நாட்டுமக்களுக்கும் இது பொது.

உலகப்பிரச்னைகளைத் தீர்க்க, காந்திய வழியால்தான் முடியும் என்று, 'புதுவழி' போதனை யார் யாருக்கோ செய்யும், இந்திய ஆளவந்தார்கள், சொந்தத்தில மேற்கொள்ள முன்வர வேண்டும். தங்கள் அடக்குமுறைகளுக்குக், காந்திய வழியை, ஒரு பலம்பொருந்திய போர்வையாகமட்டுமே உபயோகித்துக்கொண்டு வருகிறார்கள், என்றுசிலர் சொல்லியும், பலர் நினைத்துக்கொண்டும்இருப்பது, ஆளவந்தார்கள் போக்கிலே, மாற்றம் ஏற்படவில்லையானால், நீடித்து நிலைத்துவிடும்.

இரு நாடுகளுக்குமிடையில் நட்புப் பெருகி, மக்களுக்கு வளம் பலவும் சேரவேண்டுமானால், இருநாட்டிலும் மன்றமேறியுள்ளவர்கள், சென்றுபோன நாட்களை மறந்துவிட்டு, விரிந்த மனம் கொள்ள வேண்டும். ஆளுக்கொரு வல்லரசின் உறவுக்கு அச்சாரம் போடுவதை நிறுத்திக் கொண்டு, நேருக்கு நேர், திறந்த மனத்துடன், சிக்கல்களைத் திருத்திக்கொள்ள முன்வரவேண்டும், இரு அரசுகளும். மக்களால் முடியும், இந்த நிலையை இரு நாடுகளிலும் நிலைபெறச் செய்ய. பணமூட்டைகளின் பாதை பயங்கரமான விளைவுகளைக்கொண்டது. மக்களாட்சிப் பண்புடையோர் அந்த அழிவுப்பாதையைக் குறித்து நினைக்கவும் மனம் கூசுவர். அகிம்சையின் பெயர் சொல்லி அரியாசனத்தில் அமர்ந்திருப்போர், இதனை அறிந்து நடந்து கொள்ளவேண்டும். ஊருக்கு உபதேசம் மட்டுமே மாண்பளித்துவிடாது, உணர்ந்து, நடத்தையில் காட்ட முயல வேண்டும்.

அப்பொழுதுதான் நாட்டில் அமைதியும், மக்களுக்கு நல்வாழ்வும் கிடைக்க மார்க்கம் பிறக்கும்.

இல்லையேல், காஷ்மீர்களமாகும். பிணவாடைவீசும். வல்லூறுகளுக்கு விருந்து தளமாகும். வேண்டாம் இத்தீவினை ஐய! செய்ய—வே[illegible]

கோள் அறியும் குணப்பொறி

வான மண்டலத்தைப்பற்றி நுண்ணிதாக அறிந்து கொள்ளுவதற்கென்று, அமைப்படும விஞ்ஞானப் பொறியே படத்தில காட்டப்பட்டிருப்பதாகும். வான மண்டலத்தில் தவழ்ந்து நிற்கும் கோள்களையும், உடுக்களையும் (நட்சத்திரம்) பெரியவைகளாக்கி, அவைகளை உருண்டை வடிவமான பகுதியில் விழும்படி செய்கிறது இந்தப பொறி. அந்தப் படப்பிடிப்பைக் கொண்டு எளிதாக ஆராய வசதி ஏற்படுகிறது. இது "அமெரிக்காவில் வட கரோலினா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த சாப்பல் குன்றில் நிலைநாட்டப்படுவதாகும். இம் மாதிரி இன்னும் ஐந்து பொறிகள் அமெரிக்காவின் வெவ்வேறு இடங்களில் இதற்குமுன் நிறுவப்பட்டிருக்கின்றன.

உணவுப் பஞ்[illegible] ஒழியப் புதிய வழி

உடைப் பஞ்சத்தைக்கூட ஒழிக்கலாம்

காருண்ய அரசாங்கம் காட்டும் வழி

அதிக உணவு உற்பத்தி இயக்கத்தை முன்னிட்டு, புது டில்லியில் சுமார் 25 பங்களாக்களில் காலியாக உள்ள நிலத்தில் சாகுபடி செய்யப் பட்டிருக்கிறது. 6 மந்திரிகள் வீட்டில் உணவுப் பயிர் சாகுபடி செய்யப் பட்டிருக்கிறது. கவர்னர்-ஜெனரல் எஸ்டேட் முதலமைச்சர் வீடு இவைகளிலும் பயிர் வேலை துவக்கப் பட்டிருக்கிறது.

சென்னையிலும் கவர்னர் வீட்டுத் தோட்டத்தில் பயிர் சாகுபடிவேலை துவங்கிவிட்டது.

இதே போல, அவரவர் வீட்டில் காலியாக உள்ள இடங்களில் இது போல உணவுத்தானியங்களையோ, காய்கறிகளையோ பயிரிடவேண்டும் என்று மத்திய அரசாங்க விவசாய இலாகா ஒரு விசேஷ அறிக்கை வெளியிட்டிருக்கிறது.

ஆம். இனிமேல் அரிசி யில்லை என்ற கூச்சலை எவரும் கிளப்பக் கூடாது; பட்டினி என்று எவரும் சொல்லக்கூடாது. கிடைக்கும் அரிசி போதவில்லை என்று எவரும் கூறக்கூடாது. அவரவரும் தத்தம் வீட்டில் பயிரிட்டுக் கொள்ளவேண்டும்.

"உணவு உற்பத்தி இயக்கத்தில் தன் பங்கைச் செய்யத்தவறியவர் எவருக்கும் உணவு ரேஷன் பெறும் உரிமைகிடையாது" என்று அந்த டில்லி அரசாங்க விசேஷ அறிக்கை கூறுவதால், எல்லாரும் எச்சரிக்கையோடு, இன்று முதல் தத்தம் வீடுகளில் பயிரிடத் தொடங்கவேண்டும். குடியிருக்க வீடே இல்லையே என்று கேட்கும் தோழர்கள் ஒரு கூடையில் மண்ணைப்போட்டு அதில் விதைகளைத் தூவிவிட்டுத் தலைமேல் வைத்துகொண்டுசுமந்துதிரியலாம்.

படுக்கமட்டும் உள்ள சிறு அளவு வீடுகளையுடையவர்கள் 2 தொட்டிகளை வைத்துப் பயிரிடலாம். இடமிருக்கிறதோ இல்லையோ, டில்லி அரசாங்கம் அறிவித்துவிட்டது. ஆரம்பியுங்கள் உடனே வேலையை.

இதேபோல, இனிமேல் எல்லாரும் ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் குட்டிகளும் தக்ளி சுற்றக் கற்றுக்கொள்ள வேண்டுமென்பதைக் கட்டாயமாக்கவேண்டும். எல்லாரும் தக்ளி சுற்றி நூல் நூற்றால் அவரவரும் தத்தமக்கு வேண்டிய துணிகளைத் தாமே நெய்து அணிந்துகொள்ளலாம்.

நாடு முன்னேற, பஞ்சம் ஒழிய, வறுமைபோக இவை நம் காருண்ய அரசாங்கம் காட்டும் வழிகள்!

தமிழ்நாட்டுத் தொழில்கள்

தமிழ்நாட்டில் நெசவுத் தொழிலாளர் பலர் இன்று வேலையற்றுத் தவிக்கின்றனர்; பலர் வேலையில்லாமல் பட்டினிகிடந்து அல்லற்படுகின்றனர். காரணம் கைத்தறியில் உற்பத்தியாகும் துணிகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகமுடியாமல் தடை செய்யப்பட்டுவிட்டதேயாகும். நம் நாட்டு உற்பத்திப் பொருள்களுக்கு வெளிநாடுகளில் தக்க மார்க்கட் தேடித்தரும் வேலையை மத்திய அரசாங்கம் செய்யத் தவறிவிட்டதேயாகும்.

இதேபோன்று கயிறு உற்பத்தித் தொழிலின் நிலைமையும் மத்திய அரசாங்கத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று கோள யூனியன் தொழில் மந்திரி திரு. என். குஞ்சுராமன் தெரிவித்துள்ளார்.

"டாலர் செலாவணியில் பெரும் பாகத்தை இந்திய அரசாங்கத்துக்குச் சம்பாதித்துக்கொடுக்கும் கயிறு உற்பத்தித் தொழிலின் முக்கியத்துவத்தை இந்திய அரசாங்கம் இன்னும் உணரவில்லை என்றேஎனக்குத் தோன்றுகிறது" என்று அவர் கூறினர்.

அவர் இவ்வாறு கூறக் காரணம் என்ன? கயிற்றுக்கு ஏற்றுமதி வரி விதிக்கப்பட்டிருப்பதேயாகும். இந்தியக் கயிற்றுக்கு வெளிநாடுகளில் வியாபார ஸ்தலங்கள் தேடித்தராமையேயாகும.

இவ்வாறு நம் நாட்டு உற்பத்திப் பொருள்களுக்கு ஏற்றுமதி வரி விதித்து, அவை வெளியில்சென்று அங்குள்ள பொருள்களுடன் விலையில் போட்டியிட முடியாதபடி தடை செய்து வைத்திருப்பது நம் நாட்டுத் தொழில்களைத் தடை செய்வது ஆகாதா?

லட்சக்கணக்கான நெசவுத் தொழிலாளர்களின் நிலை சீர்கெட்டுத் தவிப்பதற்கும், மற்றைக் கைத்தொழில்கள் வளர முடியாமல் திணறுவதற்கும் மத்திய அரசாங்கத்தின் மாற்றாந் தாய்ப் போக்கே காரணமாயிருக்கிறது என்பது இதிலிருந்து நன்கு விளங்குகிறது. சொல்லலங்கார வீரர்களான குமரப்பாக்களும், நேருக்களும் இனியேனும் பொதுவாக நாட்டுமக்களனைவருடைய நலத்தையும் கருத்தில்கொண்டு பேசுவதை விட்டு நடைமுறையில் வேலை செய்ய முன் வருவார்களா?

வாய்ப் பேச்சு...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

ஏழைகளாக்கிக்கொண்டு போவதையும் உடனே தடுக்கவேண்டுமென்பதும் தோழர் ஜே. சி. குமரப்பாவின் உண்மையான கருத்தாக இலட்சியமாக இருந்தால், தக்ளிகளை உடனே நிறுத்திதலை முழுகிவிட்டுத் தொழிற்சாலைகளைப் பெருக்குங்கள். ஹரிஜனம், ஆதிதிராவிடர் என்றபெயரேநாட்டிலில்லாதபடி ஒழித்துவிட்டு, அவர்களைப் பிற மக்களுடன் சமத்துவமாக வாழுமாறு செய்வதற்குரிய வேலைகளை ஒரு மூன்றாண்டு நடைமுறைத்திட்டமிட்டு அதை எதிர்க்கும் சனாதனச்சக்தியை வெட்டிச் சாய்த்து வேலைசெய்யச் சட்டமூலமாக ஏற்பாடு செய்யுங்கள்.

நாட்டிலே பலதொழில்களை வளர்த்து, உழவுத் தொழிலைப் பெருக்கி வளமற்ற பல நிலங்களை வளமாக்கி ஏராளமான மக்களுக்கு தொழில் அளிக்க வசதி செய்து தருவதைவிட்டு எல்லாரும் சம்பாதிக்கவேண்டும் என்னும் தர்மோபதேசம் செய்வதையும் இலட்சியப் பேச்சுகள் பேசுவதையும் விட்டொழிக்குமாறு வேண்டுகிறோம். நம் நாடு இத்தகைய சொல் அலங்காரங்களையும் வாய்ப் பேச்சு வீரங்களையும் கேட்டுக் கேட்டு அலுத்துப் போய் விட்டது. இனியாவது நடைமுறையில் செயலாற்ற முன் வருமாறு இந்த வாய்ப்பேச்சு வீரர்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty S[illegible]t. Madras-1.